3. கவன ஈர்ப்பு

(அ) பெரியார் மாவட்டம் சவண்டப்பூர் செல்லியாண்டிகோவில் நிலத்தில் குடியிருப்பவர்கள் வெளியேற்றப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. ஏ. செங்கோட்டையன், வே. நா. சுப்பிரமணியன், வி. கே. சின்னசாமி, பி. மாரப்பன், வே. பெரியசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்பு கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பெரியார் மாவட்டம், சவண்டப்பூர் செல்லியாண்டி அம்மன் கோவில் நிலத்தில் இருபது ஆண்டுகளாகக் குடியிருந்து வந்தவர்களைக் கோயில் நிர்வாகம் வெளியேற்றுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

பெரியார் மாவட்டம், கோபி வட்டம், சவண்டப்பூர் கிராமத்திலுள்ள அருள்மிகு செல்லியாண்டியம்மன் திருக்கோயில் தமிழ்நாடு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகத்திற்கு உட்பட்ட பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும். இக்கோயில் கோபி வட்டம், பெருந்தலையூர் கிராமத்திலுள்ள மூன்றாம் நிலை திருக்கோயிலான அருள்மிகு பொன்னாச்சியம்மன் திருக்கோயிலின் குழுக் கோயிலாக உள்ளது. இக்கோயிலின் 1399-ம் பசலியின் உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ. 12,603 ஆகும்.

2. இக்கோயிலுக்குச் சொந்தமான சவண்டப்பூர் கிராமம் க. ச. எண். 414/1-ல் உள்ள 8.54 ஏக்கர் புஞ்சை நிலத்தை சில ஆண்டுகளுக்கு முன் மனைகளாகப் பிரித்து 175 நபர்களுக்கு பகுதிக்கு விடப்பட்டது. மனை ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 15 வீதம் வாடகை நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட்டு வந்துள்ளது. சென்ற 1977-ம் ஆண்டிலிருந்து பிரஸ்தாப நிலத்திலுள்ள பகுதிதாரர்கள் பகுதித் தொகையை செலுத்தவில்லை. ஆகவே, அவர்களிடமிருந்து பகுதித் தொகையை வசூலிக்கவும், அவர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றவும் கோபி டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டில் 175 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு கோயிலுக்குச் சாதகமாக தீர்ப்பாகியுள்ளது. 175 நபர்கள் மீதும்

நிறைவேற்று மனுக்கள் தாக்கல் செய்ய கோயிலில் நிதிவசதி இல்லாமலிருந்ததால் பத்து நபர்கள்மீது மட்டும் நிறைவேற்று மனுக்கள் கோபி டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு ஈ.பி.எண் 296/89 முதல் 304/89 முடியவும் மற்றும் 307/89-ன்படி பத்து நிறைவேற்று வழக்குகள் கோயிலுக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டது.

3. கோர்ட் தீர்ப்பாணையின்படி மேற்டி பத்து இடங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்ற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

4. 175 பகுதிதாரர்களிடமிருந்து வாடகை பாக்கியாக ரூ. 30,000 இதுவரை கோயிலுக்கு வரவேண்டியுள்ளது. கோர்ட்டு வழக்குகளுக்காக ரூ. 15,000 செலவழிக்கப்பட்டுள்ளது.

5. வாடகை கட்டாமல் இருப்பதாலேயே வாடகைதாரர்கள்மீது கோர்ட் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது, பத்து பேர்கள்மீது நிறைவேற்று மனு போட்டு நடவடிக்கை எடுத்தால் மொத்த பாக்கியும் வசூலாகிவிடும் என்று கருதியும் ஆலயத்தில் போதிய நிதி வசதியில்லாமையாலுமே 175 பேர்களில் 10 பேர்கள்மீது மட்டும் நிறைவேற்று மனு (E. P.) போடப்பட்டது. ஆனால் தற்போது ஏனைய 165 பேர்கள் மீதும் நடவடிக்கை தொடர ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நீண்ட நாட்களாக நடக்கும் வழக்குகள் திருக்கோயிலுக்கு சாதகமாக தீர்ப்பானதைத் தொடர்ந்தே அவர்களை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதேயன்றி, திடீரென கோயில் நிர்வாகிகள் அவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறுவது சரியில்லை.

10-00 மணி

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், வழக்கு மன்றத்தில் 10 பேர் மீது வழக்கு தொடர்ந்து அவர்களை அங்கேயிருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1972-ம் ஆண்டு அந்தப் பகுதியில் ஆற்றங்கரையில் குடியிருந்தவர்கள் வெள்ளச் சேதம் ஏற்படுகிறபோது பாதிக்கப்படுகிறார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் இந்த இடத்தை தேர்வு செய்து, ஒரு நபருக்கு 3 சென்ட் வீதம் 175 பேர்களுக்கு ஒதுக்கித் தந்தார்கள். கோயில் நிர்வாகத்திற்கு உரிய வாடகையைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். 1977-ஆம் ஆண்டில் அவர்களுக்கு போலி ரசீது தந்த காரணத்தால்தான் தொடர்ந்து வரி செலுத்த மறுத்துவிட்டார்கள். ஆகவே, அரசு இதனை மீண்டும் பரிசீலனை செய்து அவர்களுக்கு அந்த இடங்களை பட்டா செய்து வழங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே என்ன காரணத்திற்காக அவர்கள் வாடகை கொடுக்க மறுத்தார்கள் என்பது எனக்கு சரியாக காதில் விழவில்லை.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, குமாரராஜா என்ற நிர்வாக அதிகாரியினுடைய உதவியாளர் போலி ரசீது போட்டு கொடுத்த காரணத்தால் அவர்கள் அதை மறுத்தார்கள். அவர்கள் நிர்வாக அதிகாரி ரசீது தரவேண்டுமென்று கேட்ட காரணத்தால்தான் அது மறுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இதிலே முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது இந்த 8 ஏக்கர் 54 சென்ட் நிலம் ஏறத்தாழ 200 பேர்களுக்கு குடியிருப்பு வசதி செய்துகொள்வதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இதுவரையில் பட்டா தரப்படவில்லை. பட்டா என்பது ஒரு காரியம். வாடகை நிலுவை என்பது இன்னொரு காரியம். ஆகவே, தற்போதைய அரசு அல்லது அறநிலையத்துறையின் திட்டத்தின்படி யாருக்கும் கோயில் நிலத்தை பட்டா செய்து கொடுப்பதற்கு இல்லை என்று நாங்கள் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். அவர்களே மார்க்கெட் பிரைஸ் என்று கணக்கிட்டு அந்த நிலத்தை வாங்கிக்கொள்ள முன்வருவார்களேயானால், அந்தக் கோயிலுக்கு மேலும் நிலம் இருக்குமானால், ஒரு பகுதி நிலத்தை அங்கேயுள்ள குடியிருப்பவர்களுக்கு கொடுக்க அறநிலையத்துறை முன்வரும்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, 1986-ம் ஆண்டு சமூகநலத் துறை ஆணையின் பிரகாரம் கோயில் நிர்வாகத்திற்கு ஒரு தொகையை செலுத்தி, அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து பட்டாக்கள் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த நேரத்தில் அந்தக் கோயில் நிர்வாகம் தடை வாங்கிய காரணத்தால் அதை அவர்கள் பெற முடியவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன குறிப்பில் அவர்கள் அந்த நிலத்திற்கு உரிய தொகையை அரசு செலுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அரசு அதற்கு நடவடிக்கையெடுத்து, அந்தத் தொகையை 20 ஆண்டுக் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக செலுத்துவதற்கு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, அறநிலையத் துறை என்பது வங்கி அல்ல. ஆகவே 20 ஆண்டு கால தவணைத் திட்டத்தில் கொடுப்பதற்கான திட்டம் என்னிடத்தில் இல்லை. முழுத் தொகையை, மொத்தமாகக்

கட்டி நிலத்தை எடுத்துக்கொள்ள முன்வர வேண்டும். இன்னொரு நிபந்தனை அந்த கோயிலுக்கு வேறு நிலம் இருக்க வேண்டும். ஒரு கோயிலுக்கு இருக்கக்கூடிய அத்தனை நிலங்களையும் விற்று விட அறநிலையத் துறை தயாராக இல்லை. ஆகவே, முழுத் தொகையைக் கொடுக்க முன்வந்தால் நாங்கள் அதை மாற்றித்தர தயாராக இருக்கிறோம்.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, அவர்களுக்கே அந்த இடத்தை மார்க்கெட் விலை கொடுத்தால் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற அரிசின, ஆதிதிராவிட மக்களுக்குக் கூட கோயில் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய தடை இருப்பதாக அறிகிறேன். அப்படி ஒரு தடை இருப்பதால் பல இடங்களில் இன்றைக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் சொல்வது பொருந்துமா ? அல்லது தமிழகத்தில் இருக்கிற அனைத்துக் கோயில்களுக்கும் தடை நீக்கம் செய்யப்பட்டு, கிராமப் புறங்களில் வாழ்கிற ஏழை எளியவர்களுக்கு அந்த இடங்களை ஆர்ஜிதம் செய்து, வீட்டுமனைப் பட்டா கொடுக்க உத்தரவு பிறப்பிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

10-05 மணி.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே அப்படிப்பட்ட ஒரு தடை உத்தரவு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் தமிழ்நாடு முழுவதிலும் வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு நிலம் கொடுப்பதற்கு புறம்போக்கு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. எங்கே புறம்போக்கு நிலம் இல்லையோ, அங்கே அவசியப்பட்டால் கோவில் நிலத்தைக் கவனிக்கலாம் என்பதுதான் இன்றையத் திட்டம்.

(ஆ) திருமங்கலம் ஒன்றியக் கண்மாய்களிலுள்ள கருபுல மரங்களிலிருந்து ''கருப்பு ரோமப் புழு'' தோன்றியுள்ளது குறித்து.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருமங்கலம் ஒன்றியத்தில் பல கண்மாய்களின் உள்பகுதியிலுள்ள கருபுல மரங்களிலிருந்து கருப்பு ரோமப்புழு தோன்றியுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :